தினமலர்

# தேர்தல் களம் 2024

திங்கள் | ஏப்ரல் 15, 2024






# காத்திருக்கும் ஆச்சரியங்கள்

– கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பு –
இணை ஆசிரியர்

**அண்மை காலத்தில், தமிழகம் இப்படி ஒரு தேர்தலை பார்க்கவில்லை. இரண்டு திராவிட கட்சிகளுக்கு இடையே தான் போட்டி என்ற நிலை மாறி, பல தொகுதிகளில் சுவாரசியமான மும்முனை போட்டி நிலவுகிறது. மக்கள் இதை எப்படி பார்க்கின்றனர்? இந்த மாற்றத்தை வரவேற்கின்றனரா? உள்ளிட்ட கேள்விகளோடு தேர்தல் அறிவிப்புக்கு பின், கருத்துக்கணிப்பு படிவங்களோடு அவர்களை சந்தித்தோம்.**

எத்தனை பேரை சந்தித்தோம்? 88,000 பேரை சந்தித்தோம்!

தமிழகம் மற்றும் புதுச்சேரியில், 40 லோக்சபா தொகுதிகள், 264 சட்ட சபை தொகுதிகள், 3,000 பஞ்சாயத்துகள் என, நம் நாளிதழ் சார்பில் சுற்றித் திரிந்து கருத்துக்கணிப்பை நடத்தியது, ஜெ.வி.சி.ஸ்ரீராம் தலைமையிலான 'வின்னிங் எலக்ஷன்' கருத்துக்கணிப்பு குழு.

இந்த பணி அவர்களுக்கும் சரி, நம் நாளிதழ் ஆசிரியர் குழுவுக்கும் சரி, மிகவும் சவாலாக அமைந்தது. தேர்தல் அறிவிப்புக்கும், ஓட்டெடுப்புக்கும் ஒரு மாதத்திற்கும் சற்றே அதிகமான அவகாசம் மட்டுமே இருந்தது ஒரு காரணம். குறுகிய காலகட்டத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று, ஆயிரக்கணக்கான மக்களை சந்தித்தாக வேண்டும்.

அவர்களில் ஒவ்வொருவரிடமும், 'நீங்கள் யாருக்கு ஓட்டுப்போடப் போகிறீர்கள்?' என்ற எளிமையான கேள்வி மட்டும் கேட்க வேண்டும் என்றால், பணி எளிதாக இருந்திருக்கும். ஆனால், ஒவ்வொருவரும் சொல்லும் பதிலுக்கு, காரண காரியம் என்ன? அவர்களின் பதிலுக்கும், அவர்கள் சிந்தை ஓட்டத்திற்கும் பொருத்தம் இருக்கிறதா? என்றெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு நபரிடமும் 20 கேள்விகள் கேட்டோம். அவற்றுக்கு பொறுமையாக பதில் சொன்ன, 88,000 பேருக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டு இருக்கிறோம்.

ஏன் 88,000 பேர்?

பணியை துவங்கும் போது, 40 தொகுதிகளுக்கும் தலா, 2,000 பேர் என்ற கணக்கில், 80,000 பேரை சந்திக்கலாம் என்று திட்டமிட்டு இருந்தோம். ஆனால், கள நிலவரம், எங்கள் திட்டத்தை முழுதுமாக புரட்டிப் போட்டுவிட்டது. ஒவ்வொரு தொகுதியிலும், 1,500 பேரிடம் கருத்து கேட்டு வரும்போதே, கள நிலவரம் மாறத் துவங்கியது.

கணிப்பு துவங்கியபோது, பரவலாக தி.மு.க., ஆதரவு நிலவிய இடங்களில், போகப்போக, பரவலான மாற்றம் ஏற்பட்டு, எதிர்தரப்பில் ஒரு கட்சிக்கு ஆதரவு என்று சூழல் மாறியது. அதாவது, அதே இடங்களில் ஒரு வாரம் முன் பிருந்த கருத்து, அடுத்த வாரம் இல்லை என்ற நிலை உருவானது. இதுதான் மிகப்பெரிய சவாலாக உருவெடுத்தது.

இதனால், சில தொகுதிகளில் மீண்டும் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. சில தொகுதிகளில், கருத்துக் கணிப்பு நடந்த இடத்தை தவிர்த்து, வேறு இடங்களில் கூடுதல் நபர்களிடம் கருத்துக்கேட்டு, மாற்றத்தை உறுதி செய்ய வேண்டி இருந்தது. அனைத்திற்கும் மேலாக, கடைசிநேர குட்டி கருத்துக் கணிப்பு, அனைத்து தொகுதிகளிலும் நடத்த வேண்டி இருந்தது.

இந்த கட்டுரையை எழுதும் நேரத்தில் கூட, சில தொகுதிகளில் கருத்துக்கணிப்பு முடியாத நிலையில் உள்ளது. அதனால், நம் நாளிதழின் கருத்துக்கணிப்பு தான் கடைசி வாரம் வரை நடத்தப்பட்ட, ஒரே மெகா கருத்துக்கணிப்பு என, ஐயமில்லாமல் சொல்லலாம்.

இப்போதும், கள நிலவரம், கடைசி இரண்டு நாட்களில், 3ல் இருந்து 5 சதவீதம் வரை மாறக்கூடிய வாய்ப்பு இருப்பதாகத்தான் எங்களுக்கு தெரிகிறது. இந்த மாற்றம் யாருக்கு லாபம் என்றும் சொல்ல முடியவில்லை. ஏனெனில், போட்டி அவ்வளவு கடுமையாக இருக்கிறது. இந்த தேர்தல், வலுவானோருக்கும், வேலை செய்வோருக்குமே வெற்றியை தரும்.

வரும் பக்கங்களில், 15 தொகுதிகளின் நிலவரம் தெரிவிக்கப்பட்டு உள்ளது. நாளை, 15 தொகுதிகள், நாளை மறுநாள் 10 தொகுதிகள் என, பிரித்துப் பிரசுரிக்கப்படும். இது தொடர்பான விரிவான விவாதத்தை, எங்கள் 'யு டியூப்' சேனல் மற்றும் சமூக வலைதள பக்கங்களில் பார்க்கலாம்.

இதெல்லாம் பெரும் பொருட்செலவில், மண்டை காயும் வேலையாக செய்யப்பட்டு இருந்தாலும், வாசகர்கள், இது வெறும் கணிப்பு தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தேர்தல் நெருங்கி கொண்டே இருக்கிறது.

அந்த காலகட்டத்தில் சிறு மாற்றம் ஏற்படும் வாய்ப்பு இருக்கத்தான் செய்கிறது. அந்த சிறு மாற்றமும் வெற்றி தோல்வியை முடிவு செய்யும் நிலையில் தான் சில தொகுதிகள் இருக்கின்றன.


சரி, கருத்துக்கணிப்பு சாராம்சமாக என்ன சொல்கிறது? இதற்கான பதில், படத்தில் சூசகமாக சொல்லப்பட்டு இருக்கிறது.





3 ஆற்றல் இழக்கும் அசோக்
6 எழுதி கொடுத்தன எதிர்க்கட்சிகள்
9 ஊருக்கு ஒரு கதை
15 சின்னத்தால் சிக்கல்

# தி.மு.க., சாதுர்யம்

## 2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




## காங்கிரஸ் – எம்.பி., விஷ்ணுபிரசாத் செயல்பாடு




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 80.06 | 79.01 | - |
| தி.மு.க., (+) % | 23.61 | 53.96 | 51.90 |
| அ.தி.மு.க., (+) % | 45.85 | 33.8 | 24.10 |
| பா.ஜ., (+) % | 23.61 | | 14.6 |
| நாம் தமிழர் % | - | 2.83 | 7.40 |
| பிற / நோட்டா % | 4.87 | 9.33 | 2.00 |

## 2024 – லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

- தரணிவேந்தன் – தி.மு.க.,
- கஜேந்திரன் – அ.தி.மு.க.,
- கணேஷ்குமார் – பா.ம.க.,

தேர்தல் அறிவிப்புக்கு முன் அனைத்து தொகுதிகளில் தி.மு.க., கருத்துக்கணிப்பு நடத்தியது. அதில், எங்கெல்லாம் எம்.பி.,க்கள் மீது அதிருப்தி இருப்பதாக தெரியவந்ததோ, அங்கெல்லாம் வேட்பாளரை மாற்றிவிட்டது.

தற்போதைய காங்கிரஸ் எம்.பி., விஷ்ணு பிரசாத் அப்படித்தான் கடலுாருக்கு மாற்றப்பட்டார். இந்த தேர்தலுக்கு, தொகுதியை, தி.மு.க., தன்வசப்படுத்தி உள்ளது. அதற்கு முக்கிய காரணம், இந்த தொகுதி மக்களில் 28 சதவீதம் பேர், தங்களுக்கு தி.மு.க., ஆட்சியில் எந்த குறையும் இல்லை என்ற மனநிலையில் உள்ளனர். இது சராசரியை விட அதிகம்.

அதே போல், 41 சதவீதம் பேர் தான் முதல்வர் ஸ்டாலின் ஆட்சியின் மீது அதிருப்தியில் இருக்கின்றனர். இது அ.தி.மு.க., – பா.ஜ.,வுக்கு ஓட்டளிக்கப்போவதாக கூறுபவர்களின் சதவீதத்தை கூட்டினால் கிடைக்கும் தொகைக்கு சற்றே அதிகமானது.

மேலும், மத்தியில் பிரதமர் மோடி நல்லாட்சி தருகிறார் என்று 15 சதவீதம் பேர் தான் நினைக்கின்றனர். இது சராசரியைவிட குறைவு. ஆனால், அந்த 15 சதவீதம் பேர் அப்படியே பா.ஜ., கூட்டணிக்கு ஓட்டளிக்க தயாராக இருப்பது தெரிகிறது.

கடந்த 2014ல் பா.ஜ.,– பா.ம.க., தே.மு.தி.க., – ம.தி.மு.க., கூட்டணியாக இங்கு களம் கண்டபோது, 23.61 சதவீத ஓட்டுகளை பெற்றனர்.

இந்த முறை பா.ஜ., – பா.ம.க., கூட்டணியின் ஓட்டு சதவீதம் 14.60 தான். முன்பைவிட 9 சதவீதம் சரிவு. பா.ம.க.,வின் ஓட்டு வங்கி இங்கு சுருங்கிவிட்டது என்பது தான் நிதர்சனம்.


வேட்பாளர் மாற்றம் மற்றும் மத்திய அரசு மீதான அதிருப்தி காரணமாக, தி.மு.க., கூட்டணி வெறும் 2 சதவீத ஓட்டுகளை தான் இழக்கும். தன் சாதுர்யத்தால், இந்த தொகுதியை தி.மு.க., தக்கவைத்துக் கொள்கிறது.

**இந்த தொகுதி மக்கள் சிப்காட் தொழிற்பூங்கா, மாம்பழ கூழ் உற்பத்தி நிலையம், இன்னும் விரிவான ரயில் சேவைகளை தங்கள் முக்கிய தேவைகளாக முன்வைக்கின்றனர்.**

**பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் சாதனைகளாக 'ஸ்வச் பாரத்' இயக்கம் மற்றும் ஜி– 20 மாநாட்டை பெரும்பாலானோர் கருதுகின்றனர்.**

## Vs

கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி — Vs — கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பாஜ., அரசு




### தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள்

- மாதாந்திர ஓய்வூதிய திட்டம்

### பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்

- ஏழை மக்களுக்கு இலவச உணவு
- பொன்மகள் சேமிப்பு திட்டம்


## டாப் 3 அதிருப்திகள்

| தி.மு.க., | | பா.ஜ., |
|---|---|---|
| 20.50% விலை வாசி உயர்வு | 01 | 37.00% வரிச்சுமை |
| 17.40% ஊழல் | 02 | 15.30% நீட் திணிப்பு |
| 11.80% டாஸ்மாக், போதைப்பொருள் | 03 | 15.00% மாநில அதிகார பறிப்பு |

கருத்து கணிப்பு காலம்: மார்ச் 18 – 25 | கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை: 1,904

# ஆற்றல் இழக்கும் அசோக்

### 2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 76.39 | 73.11 | - |
| தி.மு.க., + (%) | 21.52 | 52.72 | 32.10 |
| அ.தி.மு.க., + (%) | 46.26 | 33.02 | 33.10 |
| பா.ஜ., + (%) | 25.30 | | 19.20 |
| நாம் தமிழர் (%) | - | 3.65 | 11.70 |
| பிற + நோட்டா (%) | 6.83 | 10.05 | 3.90 |

இந்த தொகுதியின் எம்.பி.,யாக அண்மைகாலம் வரை இருந்து மறைந்த கணேசமூர்த்தி மீது கணிசமான அதிருப்தி இருந்தது. அவர் வேட்பாளர் ஆக்கப்படாததால் தற்கொலையும் செய்து கொண்டார். ஆனால், அவருடைய தற்கொலையால் தி.மு.க., கூட்டணி மீது கோபமும் இல்லை, அனுதாபமும் இல்லை. வாக்காளர்கள் மத்தியில் எந்த மாற்றத்தையும் அந்த சம்பவம் ஏற்படுத்தவில்லை.

அதே போல், மாநில அரசு மீது பெரிய அதிருப்தி இல்லை. இருப்பினும் அ.தி.மு.க., சற்றே முன்னிலையில் இருப்பதற்கு காரணம், அந்த கட்சியின் நட்சத்திர வேட்பாளர் 'ஆற்றல்' அசோக் குமார். தமிழகத்திலேயே பணக்கார வேட்பாளர் என்று சொத்து கணக்கு தாக்கல் அடிப்படையில் அறியப்படுபவர்.

வேட்பாளர் அறிவிப்புக்கு பின், ஆற்றல் அசோக்குமார் நிச்சயம் வெற்றி பெறுவார் என்ற எண்ணம் பரவலாக இருந்தது. ஆனால் தற்போதைய சூழலில் அது கேள்விக்குறியாகி உள்ளது.

காரணம், தங்கமணியுடன் அவருக்கு ஏற்பட்டுள்ள முரண்பாடு. தங்கமணி மட்டும் அல்லாது, அ.தி.மு.க., நிர்வாகிகள், 'அவர் பார்ப்பதற்கு எவ்வாறோ பழகுவதற்கு அவ்வாறு இல்லை' என்று சொல்லி தள்ளி நிற்பதாக கூறப்படுகிறது.

பா.ஜ., கூட்டணி மூன்றாம் இடத்திற்கு தள்ளப்படுகிறது. காரணம், இங்கு போட்டியிடுவது த.மா.கா., அதுவும் வலுவான வேட்பாளர் இல்லை. இங்கு த.மா.கா., சார்பில் விடியல் சேகர் நிறுத்தப்பட்டு இருந்தால், இன்னும் கணிசமான ஓட்டுகளை கைப்பற்ற சரியான மும்முனை போட்டியாக மாறியிருக்கும்.


ஆனால், இங்கு அ.தி.மு.க., வெற்றியை கெடுக்கக் கூடிய இடத்தில் த.மா.கா., இருக்கிறது. கடந்த தேர்தலைவிட தி.மு.க., கூட்டணிக்கு, 20 சதவீதப்புள்ளி ஓட்டுகள் குறைவாக கிடைக்கும். அதில், அ.தி.மு.க.,விற்கு எதுவும் போவதாக தெரியவில்லை. அந்த ஓட்டுகள் த.மா.கா., பக்கமும் நாம் தமிழர் கட்சி பக்கமும் போகின்றன. அவை அப்படியே இருந்தால், முன்னேறி வரும் தி.மு.க., வெற்றி பெற்றுவிடும்.

அ.தி.மு.க., சற்று சறுக்குகிறது. சுதாரித்துவிட்டால் தி.மு.க.,வுக்கு வாய்ப்பு குறையும். மொத்தத்தில் மற்றொரு 'திக் திக்' தொகுதி.

**சரியான சாலைகள் இல்லாதது, குடிநீர் தட்டுப்பாடு மற்றும் வேலையில்லா திண்டாட்டம் பெரிய அளவில் தங்களை பாதிப்பதாக இந்த தொகுதி வாக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.**

**இந்த தொகுதி மக்கள், மத்திய அரசின் சாதனையாக கிராமப்புற மேம்பாட்டை குறிப்பிடுகின்றனர். டிஜிட்டல் இந்தியா மற்றும் கிராமப்புறங்களில் இணைய சேவை பாராட்டப்படுகின்றன.**

### ம.தி.மு.க., - எம்.பி., கணேசமூர்த்தி செயல்பாடு




### 2024 - லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

- **பிரகாஷ்** — தி.மு.க.,
- **ஆற்றல் அசோக்குமார்** — அ.தி.மு.க.,
- **விஜயகுமார்** — த.மா.கா.,

### Vs

| கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி | | கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பாஜ., அரசு |
|---|---|---|
| 42.10% | மோசம் | 53.70% |
| 21.70% | சுமார் | 24.60% |
| 36.20% | சூப்பர் | 21.70% |

#### தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள்

- மகளிர் உரிமை தொகை
- இலவச மகளிர் பேருந்து

#### பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்

- டிஜிட்டல் இந்தியா & UPI
- எல்.பி.ஜி., மானியம்
- PM கிசான் திட்டம்


### டாப் 3 அதிருப்திகள்

| தி.மு.க., | | பா.ஜ., |
|---|---|---|
| 21.90% விலை வாசி உயர்வு | 01 | 20.40% கார்ப்பரேட் ஆதிக்கம் |
| 14.60% ஊழல் | 02 | 12.70% மதச்சார்பின்மை சிதைவு |
| 10.00% சட்டம் - ஒழுங்கு | 03 | 11.90% நீட் திணிப்பு |


கருத்து கணிப்பு காலம் மார்ச் 28 – ஏப்.,13 | கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை 2,050

# பலவீனத்தை கடந்து வெற்றி

## 2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




## தி.மு.க., - எம்.பி., செல்வம் செயல்பாடு




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 75.04 | 74.96 | - |
| தி.மு.க., + (%) | 31.20 | 55.24 | 40.10 |
| அ.தி.மு.க., + (%) | 44.20 | 32.09 | 24.20 |
| பா.ஜ., + (%) | 18.33 | | 20.80 |
| நாம் தமிழர் (%) | - | 5.07 | 12.40 |
| பிற + நோட்டா (%) | 6.14 | 7.55 | 2.50 |

## 2024 - லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

- செல்வம் — தி.மு.க.,
- ராஜசேகர் — அ.தி.மு.க.,
- ஜோதி வெங்கடேசன் — பா.ம.க.,

இந்த தொகுதியில் பா.ஜ.,வுக்கு நல்ல வாய்ப்பு இருந்தும், தொகுதி பா.ம.க.,வுக்கு ஒதுக்கப்பட்டு விட்டது. அக்கட்சிக்கு தொகுதியில் நல்ல வரவேற்பு இல்லாதது கூட்டணிக்கு பலவீனமாகத் தெரிகிறது.

அ.தி.மு.க.,வுக்கு நல்ல கட்டமைப்பு இருக்கிறது. ஆனால் சரியான வேட்பாளரை தேர்வு செய்ய முடியாததால், கட்சி பெரும் பின்னடைவை சந்தித்திருக்கிறது. குறிப்பாக, 50 வயதுக்கும் மேற்பட்டோர் அ.தி.மு.க.,வுக்கான ஆதரவு நிலையில் உள்ளனர். இருந்தாலும், பெண்கள் மத்தியில் ஆதரவு நிலை காணப்படவில்லை.

தொகுதியில் இருக்கும் பெண்களில் பெரும்பாலானோர், தமிழக அரசின் இலவச பேருந்து பயணத் திட்டத்தால் பயனடைந்து உள்ளதாக கூறப்படுகிறது. அதனால் தி.மு.க., அரசுக்கு பரவலாக இருக்கும் எதிர்ப்பை கடந்து பெண்கள் மத்தியில் நல்ல ஆதரவு உள்ளது.

இதையடுத்து தொகுதியில் பெண்கள் ஓட்டு தி.மு.க.,வை நோக்கி செல்லக் கூடிய வாய்ப்பு உள்ளது.

இத்தொகுதிக்குள் வரும் சட்டசபைத் தொகுதிகளில் ஒன்றான மதுராந்தகம் பகுதியில் பா.ஜ.,வின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் இருந்தாலும், மற்ற பகுதிகளில் போதுமான அளவுக்கு இல்லாதது பா.ஜ.,வுக்கு பின்னடைவாக தெரிகிறது.

நாம் தமிழர் கட்சி குறிப்பிட்டு சொல்லக் கூடிய அளவுக்கு வளர்ச்சி அடைந்து, 12.5 சதவீத ஓட்டுகளை பெறக்கூடிய நிலையில் உள்ளது.


தொகுதி தி.மு.க.,வுக்கு சாதகமாக உள்ளது. காரணம், இங்கு எதிரணி பலவீனமாக இருப்பதே.

**ஒரு முனை மின்சார இணைப்பை மும்முனை இணைப்பாக மாற்ற அதிகாரிகள் கேட்கும் லஞ்சம் மற்றும் தண்ணீர் தேங்கும் சாலைகளை பாதிப்புகளாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.**

**விஸ்வகர்மா திட்டம், பிரதமரின் முத்ரா கடன் உதவி திட்டம் ஆகியவை மோடி அரசின் சாதனையாக கருதுகின்றனர்.**

## Vs

கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி — கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பாஜ., அரசு




| தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள் | பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள் |
|---|---|
| • மகளிர் உரிமை தொகை | • விஸ்வகர்மா<br>• முத்ரா கடன் |


## டாப் 3 அதிருப்திகள்

| தி.மு.க., | | பா.ஜ., |
|---|---|---|
| 33.60% ஊழல் | 01 | 35.40% கார்ப்பரேட் ஆதிக்கம் |
| 21.60% டாஸ்மாக், போதைப்பொருள் | 02 | 18.40% வரிச்சுமை |
| 13.10% சட்டம் - ஒழுங்கு | 03 | 14.50% மாநில அதிகார பறிப்பு |

கருத்து கணிப்பு காலம் மார்ச் 18 – ஏப்.,4 | கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை 2,045

# தி.மு.க., பலத்தை நம்பும் காங்கிரஸ்

**2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?**




- பா.ஜ., (+)
- தி.மு.க., (+)
- அ.தி.மு.க., (+)
- நாம் தமிழர்
- மற்றவை

| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 76.03 | 73.93 | - |
| தி.மு.க., + (%) | 23.06 | 54.59 | 38.80 |
| அ.தி.மு.க., + (%) | 50.04 | 30.79 | 24.60 |
| பா.ஜ., + (%) | 14.04 | | 19.80 |
| நாம் தமிழர் (%) | - | 3.74 | 10.20 |
| பிற + நோட்டா (%) | 12.77 | 4.55 | 6.60 |

திருவாரூர் மாவட்ட அ.தி.மு.க.,வில் செல்வாக்கு மிக்க நபராக இருக்கும் முன்னாள் அமைச்சர் காமராஜ், இந்தப் பகுதியில் அவ்வப்போது தலைகாட்டினாலும், தொகுதி மீது தீவிர கவனம் செலுத்தவில்லை. ஆனாலும், அவருக்கு இங்கு நல்ல பெயர் உள்ளது.

ஒருவேளை காமராஜ் அ.தி.மு.க., வேட்பாளராக தொகுதியில் களம் இறங்கி இருந்தால், களம் அக்கட்சிக்கு சாதகமாக மாறியிருக்கும்.

தற்போதைய எம்.பி.,யான செ.ராமலிங்கம் செயல்பாடுகள் மீது திருப்தியும் இல்லை; பெரிய அளவில் அதிருப்தியும் இல்லாத சூழல் நிலவுகிறது.

ஆனாலும், தொகுதியில் ஏதோ ஒரு மாற்றம் வர வேண்டும் என்ற ஆவல் எல்லாருடைய எண்ணத்திலும் உள்ளது.

தொகுதியில் பா.ஜ.,வுக்கு நல்ல கட்டமைப்பு உள்ளது. முன்பிருந்த நிலை மாறி கட்சி தற்போது நன்கு வளர்ந்துள்ளது. அதனால், தொகுதியில் பா.ஜ.,வே போட்டியிட்டிருக்க வேண்டும் என்ற எதிர்பாப்பு கட்சியினரிடம் உள்ளது.

ஆனால் கூட்டணி கட்சியான பா.ம.க.,வுக்கு விட்டுக் கொடுத்ததால் நல்ல வாய்ப்பை பா.ஜ., இழந்து விட்டதாக வாக்காளர்களே கூறுகின்றனர். தொகுதியில் போட்டியிடும் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் அனைவரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள்.


அதனால் தொகுதிக்குள் பெரும்பான்மையாக இருக்கும் அச்சமூகத்தினரின் ஓட்டு மூன்றாக பிரிய வாய்ப்புள்ளது. இருந்தபோதும் சிறுபான்மையின ஓட்டுகளை தொடர்ந்து பெறும் காங்., இம்முறையும் அதை தக்கவைக்கும் என்றே தெரிகிறது.

எல்லாவற்றையும் கடந்து, தொகுதிக்குள் மாற்றம் வர வேண்டும் என பொதுவான கருத்து நிலவினாலும், கூட்டணி பலம் தி.மு.க.,வுக்கு சாதகமாக இருக்கிறது. அதனால், கூட்டணி பலத்தில் காங்., வேட்பாளர் வெற்றிக் கோட்டைத் தொடவே கூடுதல் வாய்ப்பு.

**தண்ணீர் பிரச்னை, கழிவு நீர் பிரச்னை, மோசமான சாலைகள் சீர்படுத்தாதது தொகுதி மக்களுக்கான பிரதான குறைபாடுகள்.**

**மக்கள் மருந்தகம், மோடி அரசின் இலவச காப்பீட்டுத் திட்டம், இலவச ரேஷன் திட்டம் போன்றவை மோடி அரசின் சாதனைகளாக கூறப்படுகிறது.**

## தி.மு.க., - எம்.பி., ராமலிங்கம் செயல்பாடு




## 2024 - லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

- **ஆர்.சுதா** — காங்.,
- **பாபு** — அ.தி.மு.க.,
- **ம.க.ஸ்டாலின்** — பா.ம.க.,

## Vs

| | கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி | கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பாஜ., அரசு |
|---|---|---|
| மோசம் | 44.70% | 74.00% |
| சுமார் | 14.80% | 11.40% |
| சூப்பர் | 40.50% | 14.60% |

### தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள்

- மகளிர் உரிமை தொகை
- காலை உணவு திட்டம்
- மகளிர் இலவச பேருந்து

### பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்

- மோடி மருந்தகம்
- பிரதம மந்திரி காப்பீட்டு திட்டம்
- மக்களுக்கு இலவச ரேஷன்

## டாப் 3 அதிருப்திகள்


| தி.மு.க., | | பா.ஜ., |
|---|---|---|
| 21.50% சட்டம் - ஒழுங்கு | 01 | 24.80% கார்ப்பரேட் ஆதிக்கம் |
| 17.80% விலைவாசி உயர்வு | 02 | 18.80% நீட் திணிப்பு |
| 13.20% ஊழல் | 03 | 14.80% மாநில அதிகார பறிப்பு |

கருத்து கணிப்பு காலம்: மார்ச் 18 – 25

கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை: 1,967

# எழுதிகொடுத்தன எதிர்க்கட்சிகள்

## 2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 64.68 | 62.27 | - |
| தி.மு.க., + (%) | 34.44 | 56.37 | 53.60 |
| அ.தி.மு.க., + (%) | 42.20 | 20.28 | 15.00 |
| பா.ஜ., + (%) | 14.54 | | 16.90 |
| நாம் தமிழர் (%) | - | 6.04 | 10.40 |
| பிற + நோட்டா (%) | 8.59 | 17.28 | 4.10 |

தி.மு.க., அமோக ஓட்டு வித்தியாசத்தில் வெல்லவுள்ள தொகுதி என்றாலும், மிகவும் சுவாரசியமான தொகுதி. மற்ற தொகுதிகளில் கருத்துக்கணிப்பு பணியை துவங்கும் முன்பே, இங்கு, மார்ச் முதல் வாரத்தில், சோதனை முறையில் பணியை துவங்கினோம்.

அப்போது, பா.ஜ.,வுக்கு பா.ம.க., கூட்டணி இல்லாமல், 29 சதவீதம் ஆதரவு இருப்பதாக தெரிந்தது. இந்த தொகுதியை பா.ஜ., நிர்வாகி ஒருவர் குறி வைத்து தயார் செய்து வந்திருந்தார். கூட்டணி கட்சியான த.மா.கா.,விடம் இந்த தொகுதி கொடுக்கப்பட்ட பின், மீண்டும் கருத்துக்கணிப்பு நடத்தியபோது, பா.ஜ., ஆதரவு சில இடங்களில் 10 சதவீதத்திற்கும் கீழே போய்விட்டது.

தி.மு.க., நட்சத்திர வேட்பாளர்களில் ஒருவரான டி.ஆர்.பாலு போட்டியிடுவதை எதிர்கொள்ள, அ.தி.மு.க., வேட்பாளர் தேர்வில் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பா.ஜ., ஒரு படி மேலாக போய், இங்கு எந்த செல்வாக்கும் இல்லாத த.மா.கா.,விடம் தொகுதியை கொடுத்தது தான் ஆச்சரியம்.

டி.ஆர்.பாலு, தொகுதி பக்கம் அடிக்கடி வராத எம்.பி., என்று பெயர் எடுத்தவர். இருப்பினும் வெறும் மூன்று சதவீதப்புள்ளி ஓட்டு இழப்போடு தி.மு.க., வெல்கிறது என்றால், அதற்கு காரணம், உள்ளூர் தி.மு.க., கட்டமைப்பு தான். ‘எம்.பி., வரமாட்டார் என்று தெரியும். இருந்தாலும் உள்ளூர் கவுன்சிலர்களே எல்லா பிரச்னைகளையும் தீர்த்துக் கொடுக்கின்றனர். அவர்களுக்காக தி.மு.க.,விற்கு ஓட்டுப்போடுகிறோம்’ என்பதே பரவலான கருத்தாக உள்ளது.


36 சதவீதம் மக்கள் மட்டுமே தி.மு.க., அரசு மீது அதிருப்தியில் இருக்கின்றனர் என்பதும் தி.மு.க.,விற்கு கூடுதல் பலம்.

இந்த தொகுதி நிச்சயம் தி.மு.க., வசம் தான் என, தெரிந்தோ என்னவோ, எதிர்க்கட்சி வேட்பாளர்களின் பிரசாரம் அங்கொன்றும் இங்கொன்று மாக தான் நடக்கின்றன. எதிர்க்கட்சிகள் தொகுதியை எழுதியே கொடுத்துவிட்டனர் என்றால் மிகையாகாது.

**மோசமான உள்ளூர் சாலைகளால் விபத்துகள் அதிகம் நடப்பதாகவும், கழிவுநீர் கட்டமைப்பு சரியில்லை என்றும் இந்த தொகுதி மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.**


**செல்வமகள் சேமிப்பு திட்டம், ராமர் கோவில் மற்றும் நிஷ்தா ஆசிரியர் பயிற்சி திட்டத்தை மோடி அரசின் சாதனைகளாக இந்த தொகுதியில் உள்ளவர்கள் கருதுகின்றனர்.**

## தி.மு.க., – எம்.பி., டிஆர்.பாலு செயல்பாடு




## 2024 – லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

- டி.ஆர்.பாலு – தி.மு.க.,
- டாக்டர் பிரேம்குமார் – அ.தி.மு.க.,
- வேணுகோபால் – த.மா.கா.,




| தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள் | பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள் |
|---|---|
| மகளிர் உரிமை தொகை | தபால் அலுவலக திட்டங்கள் |
| இலவச மகளிர் பேருந்து | மலிவு விலை மருந்துகள் |
| ஓய்வூதிய திட்டம் | ஆயுஷ்மான் திட்டம் |


## டாப் 3 அதிருப்திகள்

| தி.மு.க., | | | பா.ஜ., | |
|---|---|---|---|---|
| 22.30% | விலை வாசி உயர்வு | 01 | 24.90% | வரிச்சுமை |
| 20.30% | டாஸ்மாக், போதைப்பொருள் | 02 | 23.20% | நீட் திணிப்பு |
| 17.20% | ஊழல் | 03 | 14.50% | மதச்சார்பின்மை சிதைவு |

கருத்து கணிப்பு காலம்: மார்ச் 7 – 23 | கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை: 2,112

# காகத்திடம் வடையை கொடுத்த பா.ஜ.,

## 2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 73.76 | 71.43 | - |
| தி.மு.க., + (%) | 25.78 | 44.67 | 38.30 |
| அ.தி.மு.க., + (%) | 41.65 | 33.34 | 26.70 |
| பா.ஜ., + (%) | 18.66 | | 27.40 |
| நாம் தமிழர் (%) | - | 5.58 | 7.60 |
| பிற + நோட்டா (%) | 13.76 | 16.33 | - |

தேர்தல் அறிவிப்புக்கு முன், இந்த தொகுதியில், பா.ஜ.,வின் ஸ்டார்ட்அப் செல் மாநில தலைவர் ஆனந்தன் ஐயாசாமி தான் போட்டியிடுவார். தன் களப்பணி காரணமாக கண்டிப்பாக வென்றுவிடுவார் என்ற தோற்றம் இருந்தது. பின், அவர் பெயரை சொல்லி தென்காசியை கேட்ட கிருஷ்ணசாமியை கழற்றிவிட்டது பா.ஜ., கடைசியில், ஒரு மாநிலத்திற்கு ஒரு பட்டியலின தலைவர் தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தனரோ என்னவோ, ஜான்பாண்டியனை கூட்டணியில் சேர்த்து அவரிடம் தொகுதியை கொடுத்துவிட்டனர்.

படுத்துக்கொண்டே ஜெயிக்க வேண்டிய தொகுதியில் இரண்டாவது இடத்திற்கு போட்டி போடுகிறது பா.ஜ.,

ஜான் பாண்டியன், கிருஷ்ணசாமி இருவருக்குமே மற்ற சாதியினர் மத்தியில் எதிர்ப்பு இருக்கிறது. அதில், ஜான் பாண்டியனைவிட கிருஷ்ணசாமி பரவாயில்லை என்று மக்கள் கருதுகின்றனர். இவர்கள் இருவராலும், தி.மு.க., வேட்பாளர் ராணி ஸ்ரீகுமாருக்கு களம் சாதகமாக இருக்கிறது.

இந்த தொகுதிக்கு உட்பட்ட சட்டசபை தொகுதிகளில், கடையநல்லூர் மற்றும் தென்காசியில் பா.ஜ.,வுக்கு நல்ல ஆதரவு இருக்கிறது; சங்கரன்கோவிலில் தி.மு.க.,விற்கு 70 சதவீதத்திற்கு மேல் ஆதரவு இருக்கிறது; வாசுதேவநல்லூரும் தி.மு.க., பக்கம் சாய்கிறது; ஸ்ரீவில்லிபுத்துாரில் டவுன் பகுதியில் பா.ஜ.,விற்கும், மற்ற பகுதிகளில் அ.தி.மு.க.,விற்கும் ஆதரவு அதிகம்.

1999 லோக்சபா தேர்தலில் தி.மு.க., – பா.ஜ., கூட்டணியாக போட்டியிட்டனர். அப்போது, தென்காசி தொகுதியில் போட்டியிட்ட பா.ஜ., 887 ஓட்டு வித்தியாசத்தில் தோற்றுப்போனது.


அப்போது, கருணாநிதி, 'நல்ல வேட்பாளரை போட்டிருந்தால் எளிதில் ஜெயித்திருக்கலாம்' என்று வாஜ்பாயிடம் சொன்னார். அதே தவறை தான் இன்றும் பா.ஜ., செய்திருக்கிறது. காகத்தை அழைத்து வடையை ஊட்டிவிட்டுள்ளது.

பா.ஜ., வாய்ப்பை இழந்தாலும், வருங்கால நோக்கில் இங்கு தேய்ந்து வருவது அ.தி.மு.க., தான். 2014ல் தனித்து போட்டியிட்டு, 41.65 சதவீதம் எடுத்த இடத்தில், 10 ஆண்டுகளில் 15 சதவீதப் புள்ளி ஓட்டுகளை இழந்து நிற்கிறது.

**விலைவாசி உயர்வு, கனிமவள கொள்ளை மற்றும் போதுமான அளவு ரயில் சேவை இல்லாததை முக்கிய குறைகளாக இந்த தொகுதி வாக்காளர்கள் சொல்கின்றனர்.**


**மோடி அரசின் சாதனையாக, 'ஸ்வச் பாரத்' இயக்கத்தையும் ராமர் கோவிலையும் பாராட்டுகின்றனர்.**

## தி.மு.க., – எம்.பி., தனுஷ் எம்.குமார் செயல்பாடு




## 2024 – லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

- **ராணி** – தி.மு.க.,
- **டாக்டர் கிருஷ்ணசாமி** – புதிய தமிழகம்
- **ஜான் பாண்டியன்** – த.ம.மு.க.,




### தி.மு,க., அரசால் பெற்ற நன்மைகள்

- இலவச மகளிர் பேருந்து

### பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்

- டிஜிட்டல் பரிவர்த்தனை
- ராமர் கோவில்

## டாப் 3 அதிருப்திகள்


| தி.மு.க., | | | பா.ஜ., | |
|---|---|---|---|---|
| 34.30% | விலை வாசி உயர்வு | 01 | 23.00% | கார்ப்பரேட் ஆதிக்கம் |
| 16.30% | ஊழல் | 02 | 20.50% | மதச்சார்பின்மை சிதைவு |
| 15.50% | சட்டம் - ஒழுங்கு | 03 | 14.70% | மாநில அதிகார பறிப்பு |

கருத்து கணிப்பு காலம்: ஏப்ரல் 2 – 7

கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை: 1,927

# வலிமையான இடத்தில் தி.மு.க.,

2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 75.57 | 72.55 | - |
| தி.மு.க., + (%) | 36.16 | 55.56 | 45.70 |
| அ.தி.மு.க., + (%) | 50.39 | 20.83 | 19.10 |
| பா.ஜ., + (%) | 5.78 | | 22.50 |
| நாம் தமிழர் (%) | - | 5.46 | 8.50 |
| பிற + நோட்டா (%) | 7.41 | 18.06 | - |

சிட்டிங் எம்.பி.,யான பழனிமாணிக்கம் மீது கடும் அதிருப்தி நிலவுகிறது. அதை அறிந்தோ என்னவோ, இம்முறை தி.மு.க., சார்பில் போட்டியிடும் வேட்பாளரை மாற்றி விட்டது அக்கட்சி. அதனால், வேட்பாளரால் தொகுதிக்குள் தி.மு.க.,வுக்கு ஏற்படவிருந்த அதிருப்தி தவிர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொகுதியில் பா.ஜ., நன்கு வளர்ச்சி அடைந்துள்ளது. குறிப்பாக, தஞ்சையின் நகர்ப்புறங்களில் 22 சதவீத அளவுக்கு வளர்ச்சி கண்டிருக்கிறது.

இந்தத் தொகுதியில் தி.மு.க., அளவுக்கு அ.தி.மு.க.,வுக்கும் வலுவான கட்டமைப்பு இருந்தாலும், சமீப கால செயல்பாடுகளால் தொகுதியில் வீழ்ச்சியை சந்தித்திருக்கிறது அ.தி.மு.க.,

இதற்கிடையில் தொகுதியை கூட்டணி கட்சியான தே.மு.தி.க.,வுக்கு அ.தி.மு.க., தாரைவார்த்து விட்டதால், காலங்காலமாக இரட்டை இலைக்கு ஓட்டளித்தவர்கள் இம்முறை முரசுக்கு ஓட்டளிப்பது சந்தேகம்.

தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில் நிலவும் பிரதமர் மோடி மீதான அதிருப்தி இந்த தொகுதியில் அப்பட்டமாக தெரிகிறது. இருந்த போதும், பா.ஜ.,வின் வளர்ச்சியை எடுத்துக்காட்டும் முக்கியமான தொகுதிகளில் ஒன்றாக தஞ்சாவூர் உள்ளது.

கூட்டணி கட்சிகள் பலத்தை மீறி தி.மு.க..,வின் பலம் தொகுதிக்குள் அதிகமாக இருப்பதால் தமிழக அரசு மீது நிலவும் அதிருப்தியை கடந்து தி.மு.க.,வே வெல்லும் சூழல் உள்ளது.


இங்கே அ.தி.மு.க.,வுக்கு 19.1 சதவீத வாக்காளர்கள் ஓட்டளிப்பதாக தெரிவித்துள்ளனர்.

இந்த தொகுதியில் பா.ஜ.,வும் அ.தி.மு.க.,வும் கூட்டணியாக இணைந்து போட்டியிட்டு இருந்தால், தி.மு.க.,வுக்கு வலுவான போட்டியை உருவாக்கி இருக்கலாம்.

**இந்த பகுதியில் குடிநீர் மற்றும் காவிரி நதி தொடர்பான பிரச்னைகளை மிக முக்கியமான பாதிப்புகளாக குறிப்பிடுகின்றனர்.**

**மோடியின் சாதனையாக பணமதிப்பிழப்பு நடவடிக்கையை கருதுகின்றனர்.**


## தி.மு.க., - எம்.பி., பழனிமாணிக்கம் செயல்பாடு




## 2024 - லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

| வேட்பாளர் | கட்சி |
|---|---|
| முரசொலி | தி.மு.க., |
| சிவநேசன் | தே.மு.தி.க., |
| முருகானந்தம் | பா.ஜ., |

## Vs




### தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள்

- மகளிர் உரிமை தொகை
- இலவச மகளிர் பேருந்து

### பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்

- வங்கி கணக்கு துவங்குதல்
- விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6,000
- எரிவாயு மானியம்
- கோவிட் தடுப்பூசி திட்டம்


## டாப் 3 அதிருப்திகள்

| தி.மு.க., | | | பா.ஜ., |
|---|---|---|---|
| 23.50% | விலை வாசி உயர்வு | 01 | 22.80% வரிச்சுமை |
| 14.30% | டாஸ்மாக், போதைப்பொருள் | 02 | 21.90% நீட் தினிப்பு |
| 13.90% | சட்டம் - ஒழுங்கு | 03 | 15.90% கார்ப்பரேட் ஆதிக்கம் |

கருத்து கணிப்பு காலம் மார்ச் 14 – 24 | கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை 2,011

# ஊருக்கு ஒரு கதை!

## 2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 73.31 | 71.15 | |
| தி.மு.க., (+) | 24.87 | 51. 95 | 36.00 % |
| அ.தி.மு.க., (+) | 41.72 | 35.47 | 29.20 % |
| பா.ஜ., (+) | 27.26 | | 24.80% |
| நாம் தமிழர் | | 2.95 | 10.00 % |
| பிற / நோட்டா | 1.28 | 1.41 | - |

இங்குள்ள ஆறு சட்டசபை தொகுதிகளும் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இல்லாமல் இருக்கின்றன. மடத்துக்குளம் சட்டசபை தொகுதி கொங்கு மண்டல தொகுதிகளைப்போல் அல்லாமல் திண்டுக்கல் போல் இருக்கிறது. அ.தி.மு.க.,வின் செல்வாக்கு இங்கு மங்கிவிட்டது. அ.தி.மு.க., – எம்.எல்.ஏ., மகேந்திரனால் இங்கு ஓட்டுகளை திரட்ட முடியவில்லை என்பதே நிதர்சனம். இந்த பொள்ளாச்சி லோக்சபா தொகுதிக்கான தி.மு.க., வேட்பாளர் ஈஸ்வரசாமி மடத்துக்குளத்தை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு அமோக ஆதரவு இருக்கிறது.

உடுமலை சட்டசபை தொகுதியில் பா.ஜ., மற்றும் அ.தி.மு.க.,விற்கு சரிசமமான ஆதரவு இருக்கிறது. தி.மு.க.,விற்கு பெரிய ஆதரவு இல்லை.


பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு சட்டசபை தொகுதிகளில் தென்னை சம்பந்தமான பிரச்னைகள் அதிகம் இருக்கின்றன. அதை பா.ஜ.,வே அதிகம் கவனித்து களப்பணியாற்றி வருகிறது. அதனால், பா.ஜ,விற்கே இந்த இரண்டு தொகுதிகளிலும் ஆதரவு இருக்கிறது. இந்த இரண்டு தொகுதிகளிலும் மிக வினோதமான ஒரு பிரச்னை தலையெடுத்து உள்ளது. பெண்களுக்கான இலவச பஸ்ஸால் ஆட்டோ தொழில் படுத்துவிட்டதாக ஆட்டோ ஓட்டுனர்கள் கருதுகின்றனர். அதனால், அவர்கள் அனைவரும் தி.மு.க.,விற்கு எதிராக திரும்பியுள்ளனர். தொண்டாமுத்தூர் சட்டசபை தொகுதி அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் கோட்டை. ஆனால், இங்கு தொண்டாமுத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களை தவிர்த்து மற்ற பகுதிகளில் பா.ஜ.,விற்கு ஆதரவு அதிகமாக இருக்கிறது. வேலுமணியின் ஆதிக்கம் மங்கி வருவது தெரிகிறது.

வால்பாறை சட்டசபை தொகுதியில் மலைக்கு மேலே, மலைக்கு கீழே என, வேறுபாடு இருக்கிறது. மலைக்கு கீழே முழுதும் பா.ஜ., ஆதரவு இருக்கிறது. ஆனால், மலைக்கு மேலே டவுன் பகுதியில் முற்றிலும் தி.மு.க.,வுக்கு தான் ஆதரவு இருக்கிறது. காரணம், 2022 முதல் இந்த இடத்தில் இருந்த அ.தி.மு.க., நிர்வாகிகள் தி.மு.க.,விற்கு மாறிவிட்டனர். பல்வேறு நலத்திட்ட உதவிகளை இவர்கள் மக்களுக்கு வாங்கிக்கொடுப்பதால், கடந்த 2011 முதல் அ.தி.மு.க., கோட்டையாக இருந்த இடம் இப்போது தி.மு.க., கைகளுக்கு சென்றுவிட்டது. மடத்துக்குளம் மற்றும் வால்பாறையில் உள்ள ஆதரவு மட்டுமே இந்த முறை கரை சேர்த்துவிடும்.

**வன விலங்கு தாக்குதல் முக்கிய பிரச்னையாக இருக்கிறது. மேலும், இளநீர் பதப்படுத்தும் தொழிற்சாலை தேவை என, வாக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.**

**'ஸ்வச் பாரத்' இயக்கத்தையும் 'டிஜிட்டல் இந்தியா' திட்டத்தையும் மோடி அரசின் சாதனைகளாக பாராட்டுகின்றனர். பொன்மகள் சேமிப்பு திட்டத்திற்கும் இந்த தொகுதியில் நல்ல வரவேற்பு இருக்கிறது.**

## தி.மு.க., – எம்.பி., சண்முகசுந்தரம் செயல்பாடு




### 2024 – லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

- **ஈஸ்வரசாமி** – தி.மு.க.,
- **கார்த்திகேயன்** – அ.தி.மு.க.,
- **வசந்தராஜன்** – பா.ஜ.,

### Vs

| கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி | | கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பாஜ., அரசு |
|---|---|---|
| 69.10% | மோசம் | 74.90% |
| 17.00% | சுமார் | 14.00% |
| 13.90% | சூப்பர் | 11.10% |

| தி.மு,க., அரசால் பெற்ற நன்மைகள் | பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள் |
|---|---|
| • மக்கள் தேடி மருத்துவம் | • பொன்மகள் சேமிப்பு திட்டம்<br>• டிஜிட்டல் இந்தியா |

### டாப் 3 அதிருப்திகள்


| தி.மு.க., | | பா.ஜ., |
|---|---|---|
| 28.10% சட்டம் – ஒழுங்கு | 01 | 29.70% கார்ப்பரேட் ஆதிக்கம் |
| 24.70% விலைவாசி உயர்வு | 02 | 17.50% வரிச்சுமை |
| 20.80% டாஸ்மாக், போதைப்பொருள் | 03 | 16.80% மதச்சார்பின்மை சிதைவு |

கருத்து கணிப்பு காலம்: ஏப்., 2 – 12

கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை: 2,001

# தி.மு.க.,விற்கு அமோக வெற்றி

## 2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 78.19 | 77.66 | - |
| தி.மு.க., + (%) | 31.08 | 57.85 | 57.30 |
| அ.தி.மு.க., + (%) | 46.86 | 31.44 | 12.90 |
| பா.ஜ., + (%) | 14.78 | | 17.70 |
| நாம் தமிழர் (%) | - | 2.39 | 8.50 |
| பிற + நோட்டா (%) | 7.17 | 8.32 | 3.60 |

தற்போதைய எம்.பி., அண்ணாதுரை மீது, 40 சதவீதத்திற்கும் குறைவானவர்கள் தான் அதிருப்தியில் இருக்கின்றனர். இது பெரிய பிரச்னை இல்லை. சொல்லப்போனால், நிறைய மக்களுக்கு எம்.பி.,யை பிடித்திருக்கிறது. அதனாலேயே தி.மு.க., சாதுர்யமாக அவரை மாற்றவில்லை.

தி.மு.க., அரசு மீதான அதிருப்தியும் 36 சதவீத வாக்காளர்கள் மத்தியில் தான் இருக்கிறது. அமைச்சர் எ.வ.வேலுவின் பலம் இங்கு அசாத்தியமாக உள்ளது. அவரே இந்த தொகுதிக்கு பொறுப்பு அமைச்சர். அவரது மேற்பார்வையில் 2019ல் கிடைத்த ஓட்டுகள் அப்படியே கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

எதிர் அணி பரிதாபமாக இருக்கிறது. ஒரு காலத்தில் வனரோஜா என்ற பூ விற்கும் தொழில் செய்து வந்தவரை, ஜெயலலிதா இங்கிருந்து எம்.பி.,யாக்கினார். அ.தி.மு.க., அப்படி பலம் படைத்ததாக இருந்தது. இன்று கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, 13 சதவீத ஓட்டுக்கு தடுமாறுகிறது அ.தி.மு.க., பரிதாபமாக மூன்றாம் இடத்திற்கு தள்ளப்படுகிறது.

பா.ஜ., வேட்பாளர் நிலை இன்னும் பரிதாபம். ஐந்து ஆண்டுகளாக கடலூார் தொகுதியில் களப்பணி ஆற்றியவரை திடுமென இந்த தொகுதியில் போட்டது கட்சி தலைமை. தொகுதிக்கு புதியவர். ஒரு மாதத்தில் ஒன்றும் சாதிக்க முடியாது. பா.ஜ., கட்டமைப்பும் மோசமான நிலையில் இருப்பதால், முற்றிலும் பா.ம.க.,வை நம்பி தான் இவருக்கு ஓட்டு வரும்.

திருவண்ணாமலை டவுன் பகுதியில் மட்டும் பா.ஜ.,வுக்கு ஆதரவு இருக்கிறது. நாம் தமிழர் கட்சிக்கும் கணிசமான ஓட்டுகள் இருக்கின்றன. சரியான எதிர்க்கட்சி இல்லாத இடங்களை நாம் தமிழர் நிரப்பி வருவதை பார்க்க முடிகிறது.


3.50 சதவீதம் வாக்காளர்கள் மட்டும் இன்னும் முடிவெடுக்காமல் இருக்கின்றனர். அவர்கள் ஓட்டு யாருக்குப் போனாலும் தி.மு.க., வெற்றியில் மாற்றம் ஏற்படப்போவது இல்லை.

தி.மு.க., அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெல்ல உள்ள தொகுதியாக திருவண்ணாமலை இருக்கலாம். இங்கு தேய்ந்துவரும் அ.தி.மு.க.,வின் வன்னியர் ஓட்டு, பா.ஜ., கூட்டணி பக்கம் திரும்பினால் மட்டும் ஓட்டு வித்தியாசம் குறைய வாய்ப்பு இருக்கிறது. மற்றப்படி இங்கு தி.மு.க.,விற்கு அமோக வெற்றி என்று தைரியமாக சொல்லலாம்.

**உள்ளூர் சாலைகள் படுமோசமாக இருக்கின்றன என, வாக்காளர்கள் புலம்புகின்றனர். நெடுஞ்சாலைகள் நல்ல தரத்தில் இருக்கும்போது, ஏன் உள்ளூர் சாலைகளும் அப்படி இருக்கக்கூடாது என்று கேட்கின்றனர்.**

**மத்திய அரசிடம் இருந்து வரும் இலவச ரேஷன் அரிசியை பாராட்டுகின்றனர். ஆனால், மத்திய அரசு திட்டங்கள் பற்றி பரவலாக இங்கு தெரியவில்லை. 24 சதவீதம் மக்கள் மட்டுமே மத்திய அரசிடம் இருந்து நல திட்டங்கள் கிடைத்திருப்பதாக சொல்கின்றனர்.**

## தி.மு.க., – எம்.பி., அண்ணாதுரை செயல்பாடு




## 2024 – லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

- சி.என்.அண்ணாதுரை – தி.மு.க.,
- கலியபெருமாள் – அ.தி.மு.க.,
- அஸ்வத்தாமன் – பா.ஜ.,

## Vs

| கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி | | கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பா.ஜ., அரசு |
|---|---|---|
| 36.50% | மோசம் | 74.90% |
| 19.20% | சுமார் | 13.50% |
| 44.30% | சூப்பர் | 11.60% |

### தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள்

- மகளிர் உரிமை தொகை
- இலவச மகளிர் பேருந்து
- காலை உணவு திட்டம்
- இல்லம் தேடி கல்வி

### பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்

- ஆயுஷ்மான் பாரத் கார்டு
- மலிவு விலை மருந்தகம்
- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா

## டாப் 3 அதிருப்திகள்


| தி.மு.க., | | | பா.ஜ., | |
|---|---|---|---|---|
| 26.20% | டாஸ்மாக், போதைப்பொருள் | 01 | 22.10% | நீட் திணிப்பு |
| 22.20% | ஊழல் | 02 | 21.80% | மதச்சார்பின்மை சிதைவு |
| 18.60% | விலைவாசி உயர்வு | 03 | 21.00% | கார்ப்பரேட் ஆதிக்கம் |

கருத்து கணிப்பு காலம்: மார்ச் 13 – 19


கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை: 2,025

# ராமலிங்கம் கையில் மாற்றம்

**2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?**




**தி.மு.க., - எம்.பி., சின்ராஜ் செயல்பாடு**




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 76.03 | 73.93 | - |
| தி.மு.க., + (%) | 23.06 | 54.59 | 33.50 |
| அ.தி.மு.க., + (%) | 50.04 | 30.79 | 27.00 |
| பா.ஜ., + (%) | 14.04 | | 31.00 |
| நாம் தமிழர் (%) | - | 3.74 | 8.50 |
| பிற + நோட்டா (%) | 12.77 | 4.55 | – |

இங்குள்ள வாக்காளர்களுக்கு தி.மு.க., அரசை பிடிக்கவில்லை. தங்கள் எம்.பி., சின்ராஜையும் பிடிக்கவில்லை. தி.மு.க., கூட்டணி சார்பில் போட்டியிடும் கொ.ம.தே.க., வேட்பாளர் மாதேஸ்வரனையும் பிடிக்கவில்லை.

அ.தி.மு.க., ஓரளவிற்கு பலத்தோடு இருக்கிறது. மற்ற தொகுதிகளைப்போல் மோசமாக தேயவில்லை. பா.ஜ., மீது நல்ல அபிமானம் இருக்கிறது. இதனால் இங்கு சுவாரசியமான மும்முனை போட்டி உருவாகி இருக்கிறது. தமிழகத்தின், 'திக் திக்' தொகுதிகளில் இதுவும் ஒன்று.

தி.மு.க., மீது உள்ள அதிருப்தி மற்றும் கொ.ம.தே.க., வேட்பாளருக்கு எதிர்ப்பால், அந்த கூட்டணி, 2019ஐ ஒப்பிடுகையில், 21 சதவீதப்புள்ளி ஓட்டுகளை இழக்கிறது. இங்கு தி.மு.க., வேறு ஒரு வேட்பாளரை நிறுத்தி இருந்தால் இவ்வளவு சரிவு ஏற்படாமல் தடுத்திருக்கலாம்.

அதே போல், அ.தி.மு.க.,வும் நல்ல வேட்பாளரை போட்டிருந்தால், தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டு இருந்திருக்கலாம். இப்போது இரண்டாம் இடத்திற்கு போட்டிபோடும் நிலை உருவாகி இருக்காது.

இவர்களுக்கு மத்தியில், பா.ஜ., வேட்பாளர் ராமலிங்கம் ஸ்டார் வேட்பாளராக பார்க்கப்படுகிறார். செல்வாக்கு உள்ளவர் என்று தொகுதி மக்கள் இடையே கருத்து இருக்கிறது.

ராமர் கோவில் இங்கு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதும் இவருக்கு பலம். நாமக்கல் தொகுதியில் மத்திய அரசு திட்டங்கள் பற்றி பரவலாக தெரிகிறது. திட்டங்களும் நிறையபேரிடம் சென்று சேர்ந்திருக்கின்றன. இதெல்லாம் பா.ஜ.,வுக்கு பலமாக அமைகிறது.

இப்போது பலவீனமாக இருப்பது, அதே ஸ்டார் வேட்பாளர் ராமலிங்கம் தான். அவர் பிரசாரத்திற்கு சரிவர செல்வதில்லை என்ற புகார் கட்சியினர் மத்தியில் பரவலாக இருக்கிறது. இவர் சற்றே முயற்சி செய்தார் என்றால், தி.மு.க.,வின் வாக்கு விகிதத்தை மிஞ்சிவிடலாம் என்பதே அனைத்து கட்சி தொண்டர்கள் மத்தியிலும் கருத்தாக உள்ளது.

ஆக, நாமக்கல்லில் தி.மு.க., வென்றது என்றால், அதற்கு, 'ராமலிங்கத்தின் சோம்பேறித்தனம் தான் காரணம்' என்று இந்த தொகுதி பா.ஜ.,வினர் முன் ஜாமின் வாங்கிக் கொள்கின்றனர்.

**இந்த தொகுதியின் முக்கிய பிரச்னைகளாக, முட்டை நேரடி கொள்முதல் செய்யப்பட வேண்டும் மற்றும் பொன்னி நதியையும் காவிரி நதியையும் இணைக்க வேண்டும் என்பனவற்றை வாக்காளர்கள் முன் வைக்கின்றனர்.**


**மோடி அரசின் மிகப்பெரிய சாதனையாக, 'ஸ்வச் பாரத்' இயக்கத்தை சொல்கின்றனர். சமையல் எரிவாயுக்கான மானியத்தையும் இப்பகுதி மக்கள் வரவேற்கின்றனர்.**

**2024 - லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்**

| வேட்பாளர் | கட்சி |
|---|---|
| மாதேஸ்வரன் | கொ.ம.தே.க., |
| தமிழ்மணி | அ.தி.மு.க., |
| ராமலிங்கம் | பா.ஜ., |

**Vs**

**கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி** | **கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பாஜ., அரசு**




**தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள்**

- மகளிர் உரிமை தொகை

**பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்**

- விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6,000


## டாப் 3 அதிருப்திகள்

| தி.மு.க., | | | பா.ஜ., |
|---|---|---|---|
| 19.10% விலைவாசி உயர்வு | 01 | 21.30% | மாநில அதிகார பறிப்பு |
| 17.80% டாஸ்மாக், போதைப்பொருள் | 02 | 18.50% | கார்ப்பரேட் ஆதிக்கம் |
| 16.90% ஊழல் | 03 | 16.70% | மதச்சார்பின்மை சிதைவு |

கருத்து கணிப்பு காலம் ஏப்ரல் 2 – 10 | கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை 2,303

# வளர்கிறது பா.ஜ., ஆனால்...

**2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?**




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 77.74 | 78.54 | - |
| தி.மு.க., + (%) | 23.43 | 57.66 | 37.20 |
| அ.தி.மு.க., + (%) | 45.75 | 29.44 | 20.70 |
| பா.ஜ., + (%) | 21.45 | | 26.40 |
| நாம் தமிழர் (%) | - | 2.51 | 8.00 |
| பிற + நோட்டா (%) | 0.95 | 1.04 | 7.7 |

டெல்டாவை போல், வட மாவட்டங்களிலும், பெரிய அளவிற்கு பா.ஜ., வளரவில்லை. விதிவிலக்கான ஒரு வட தமிழக தொகுதி அரக்கோணம். இங்கு பா.ஜ., ஆதரவு நன்கு வளர்ந்து வருகிறது. மோடியை வெறுப்பது, கிட்டத்தட்ட முற்றிலும் மறைந்துவிட்டது. அதனால், மாறிவரும் வாக்கு விகிதங்களை வெளிச்சம் போட்டு காட்டும் சுவாரசியமான தொகுதிகளில் இதுவும் ஒன்று.

இங்கு பா.ஜ., கூட்டணியில் பா.ம.க., தரப்பில் பாலு போட்டியிடுகிறார். இவருக்கும், மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கிறது. வளர்ந்து வரும் பா.ஜ., ஆதரவு, இவருக்கு பலமாக அமைகிறது. ஆனால், இன்னும் வெற்றி கிடைக்கும் அளவிற்கு பா.ஜ., ஆதரவு வளரவில்லை.

2014ல் அ.தி.மு.க., அல்லாமல் பா.ஜ., கூட்டணி அமைத்து போட்டியிட்டபோது, 21.45 சதவீதம் பெற்றது. இப்போது அதே போல் ஒரு சூழலில் அதன் ஓட்டு விகிதம் 5 சதவீதம் வளர்ந்துள்ளது. காரணம், பா.ஜ., மாநில தலைமை இங்கு உள்ளூர் தலைவர்கள் மற்றும் கட்டமைப்பை வளர்ப்பதில் கவனம் செலுத்தாதது.

தி.மு.க., கூட்டணியில் மீண்டும் ஜெகத்ரட்சகன் போட்டியிடுகிறார். அவருக்கு தனிப்பட்ட முறையில் மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை. இருப்பினும், தி.மு.க., கூட்டணி மற்றும் தி.மு.க.,வின் கட்சி கட்டமைப்பு என்ற பெரும் பலங்கள் அவரை கரை சேர்க்கின்றன.


ஆனால், 2019 அளவிற்கு கம்பீரமான வெற்றி கிடைக்காது. இன்றைய நிலையில் கடந்த தேர்தலைவிட, 20 சதவீதப்புள்ளிகள் குறைவாகத்தான் ஓட்டு கிடைக்கும். ஆனால், ஜெகத்ரட்சகனால் மட்டும் திறக்கக்கூடிய மந்திர பொக்கிஷ பெட்டி ஒன்று இருக்கிறது. இங்குள்ள வாக்காளர்களில் 8 சதவீதம் பேர் தாங்கள், 'பரிசுப்பொருள்' அடிப்படையில் தான் ஓட்டு அளிப்பதாக தெரிவிக்கின்றனர். இது மற்ற தொகுதிகளின் சராசரியை விட அதிகம். இவர்களை ஜெகத்ரட்சகன் மட்டும் தான் திருப்திப்படுத்த முடியும் என்றும் அவர்களில் சிலர் சொல்கின்றனர்.

அந்த 8 சதவீதத்தை அப்படியே அள்ளினால், ஓட்டு வித்தியாசம் சற்றே முன்னேற வாய்ப்பு இருக்கிறது. மற்றபடி இங்கும் சரியான எதிர்க்கட்சி நிலை இல்லாததால், நாம் தமிழர் கட்சிக்கு கணிசமான வளர்ச்சி இருக்கிறது.

**இந்த தொகுதி மக்கள் சிப்காட் தொழிற்பூங்கா, ஜவுளி தொழில் பூங்கா மற்றும் வேளாண் சார்ந்த தொழில் பூங்கா வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.**


**மற்ற நாடுகள் மத்தியில் நம் நாட்டுக்கு உருவாகி இருக்கும் மதிப்பு, வளர்ந்து வரும் நம் ராணுவ பலம், பெருகி வரும் நெடுஞ்சாலை வசதிகளை கூறி இந்த தொகுதி மக்கள், மத்திய அரசை பாராட்டுகின்றனர். ராமர் கோவில் மற்றும் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டையும் வரவேற்கின்றனர்.**

## தி.மு.க., – எம்.பி., ஜெகத்ரட்சகன் செயல்பாடு




## 2024 – லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

- ஜெகத்ரட்சகன் – தி.மு.க.,
- ஏ.எல்.விஜயன் – அ.தி.மு.க.,
- கே.பாலு – பா.ம.க.,




### தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள்

- மகளிர் உரிமை தொகை
- சோளிங்கர் கோவிலில் ரோப் கார் வசதி

### பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்

- விஸ்வகர்மா யோஜனா
- விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6,000
- டிஜிட்டல் பரிவர்த்தனை


## டாப் 3 அதிருப்திகள்

| தி.மு.க., | | பா.ஜ., |
|---|---|---|
| 21.90% டாஸ்மாக், போதைப்பொருள் | 01 | 22.30% வரி சுமை |
| 21.00% விலைவாசி உயர்வு | 02 | 19.20% மதச்சார்பின்மை சிதைவு |
| 19.70% ஊழல் | 03 | 11.70% மாநில அதிகார பறிப்பு |

கருத்து கணிப்பு காலம்: மார்ச் 28 – ஏப்., 5 | கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை: 2,002

# 2ம் இடம் யாருக்கு?

### 2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 78.94 | 76.48 | - |
| தி.மு.க., + (%) | 28.57 | 50.48 | 51.10 |
| அ.தி.மு.க., + (%) | 49.42 | 36.56 | 19.20 |
| பா.ஜ., + (%) | 14.04 | | 20.50 |
| நாம் தமிழர் (%) | 14.98 | 3.35 | 9.20 |
| பிற + நோட்டா (%) | 1.05 | 0.84 | - |

மாற்று அரசியலுக்காக ஏங்கும் தொகுதியாக இருக்கிறது.

பா.ஜ., வெற்றி பெறக் கூடிய அளவுக்கான வளர்ச்சியை பெற்றத் தொகுதி இது. அதை வைத்தே தொகுதிக்குள் பல்வேறு மக்கள் நல திட்டங்களை தொடர்ச்சியாக பா.ஜ., பிரமுகர்கள் செய்து வந்தனர்.

கட்சியின் மாநில செயலராக இருக்கும் அஸ்வத்தாமன், இந்தத் தொகுதியில் பா.ஜ., சார்பில் போட்டியிட்டிருந்தால், லோக்சபா உறுப்பினராகக் கூடிய வாய்ப்புள்ள தொகுதி.

கூட்டணி கட்சியான பா.ம.க.,வுக்கு தொகுதியை பா.ஜ., ஒதுக்கியதோடு, அங்கு பா.ம.க., தரப்பில் சரியான வேட்பாளர் போடப்படவில்லை என்ற குறைபாடு உள்ளது.

மக்களுக்கான முக்கிய தேவைகள் அனைத்தும் மத்திய அரசால் செய்து கொடுக்கப்பட வேண்டியவை. இந்த பகுதியில் தொழில் பூங்கா, முந்திரி வாரியம், பாலாப்பழ குளிர்பதன கிடங்கு உள்ளிட்டவை தொகுதி மக்களுக்கான பிரதான தேவைகளாக உள்ளன. தொழில் வளர்ச்சியைத்தான் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

பிரதமர் மோடி மீதான அதிருப்தி இந்தத் தொகுதியிலும் பிரதானமாக வெளிப்படுகிறது.

தொகுதி மற்றும் மாவட்டத்தின் பிரதான அரசியல்வாதியாக வளர்ந்திருக்கும் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்தை கடந்து வேறு பெரிய அரசியல் தலைவர்கள் வளராதது, தொகுதிக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

இருமுனைப் போட்டியாக இருந்திருந்தால், காங்கிரஸ் தோற்கவே வாய்ப்பு அதிகம். ஒரு ஏக்கர் நிலத்துக்கு வருடத்துக்கு 6,000 ரூபாய் நிவாரண உதவியாக விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் தவிர, சொல்லிக் கொள்ளும்படியான திட்டம் எதையும் மோடி அரசு செயல்படுத்தவில்லை என மக்கள் குறைபட்டுள்ளனர்.


வரும் 2026 சட்டசபைத் தேர்தலில், இந்த தொகுதியில் நாம் தமிழர் அல்லது நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம் கட்சி சிறப்பான ஓட்டுகளை பெற வாய்ப்புள்ளது. சீமான், இங்கு போட்டியிட்டால் வெற்றி பெறுவார் என்று சொல்லும் அளவுக்கு, நாம் தமிழர் கட்சிக்கு வலுவான தொகுதியாக கடலூர் உள்ளது.

காங்., 50 சதவீத ஓட்டுகளை வாங்கி வெற்றிபெறக் கூடிய தொகுதியாக கடலூர் உள்ளது.

**தொழில் பூங்கா, முந்திரி வாரியம், பலாப்பழ குளிர்பதன கிடங்கு அமைக்காதது போன்றவற்றை மக்கள் குறையாக சொல்கின்றனர்.**

**ராமர் கோவில் கட்டியது, முத்தலாக் தடை சட்டம் அமல்படுத்தியது மோடியின் சாதனையாக மக்கள் கருதுகின்றனர்.**

### தி.மு.க., - எம்.பி., ரமேஷ் செயல்பாடு




### 2024 - லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

| வேட்பாளர் | கட்சி |
|---|---|
| விஷ்ணு பிரசாந்த் | காங்கிரஸ் |
| சிவக்கொழுந்து | தே.மு.தி.க., |
| தங்கர் பச்சான் | பா.ம.க., |

### Vs

| | கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி | கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பாஜ., அரசு |
|---|---|---|
| மோசம் | 49.60% | 74.50% |
| சுமார் | 18.80% | 14.60% |
| சூப்பர் | 31.60% | 10.90% |

**தி.மு,க., அரசால் பெற்ற நன்மைகள்**

- மகளிர் உரிமை தொகை
- காலை உணவு திட்டம்

**பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்**

- விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 6,000


### டாப் 3 அதிருப்திகள்

| தி.மு.க., | | | பா.ஜ., | |
|---|---|---|---|---|
| 22.70% | விலைவாசி உயர்வு | 01 | 22.20% | வரிச்சுமை |
| 20.50% | டாஸ்மாக், போதைப்பொருள் | 02 | 16.90% | கார்ப்பரேட் ஆதிக்கம் |
| 15.20% | ஊழல் | 03 | 15.10% | நீட் திணிப்பு |

கருத்து கணிப்பு காலம் ஏப்ரல் 2 – 9 | கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை 2,132

# அதிருப்தியிலும் வெற்றி!

**2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?**




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 77.86 | 76.88 | - |
| தி.மு.க., + (%) | 35.41 | 52.67 | 49.70 |
| அ.தி.மு.க., + (%) | 46.86 | 31.38 | 17.70 |
| பா.ஜ., + (%) | 4.62 | | 16.70 |
| நாம் தமிழர் (%) | - | 5.18 | 15.90 |
| பிற + நோட்டா (%) | 1.66 | 0.95 | - |

டெல்டா மாவட்டங்களில் நிலவும் பிரதமர் மோடி மீதான அதிருப்தி, இங்கு வலுவாக உள்ளது.

மல்லிகை எண்ணெய் தயாரிக்கும் நிறுவனங்கள், இந்தப் பகுதியில் வர வேண்டும் என்பது மக்களின் வெகுநாளைய கோரிக்கையாக உள்ளது. அதை மத்திய அரசு நிறைவேற்ற முன் வரவில்லை என்ற குறைபாடு மக்கள் மனதில் பெரும் குறையாக உள்ளது.

அரசு சார்பில் சர்க்கரை ஆலை நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட சின்ன சின்ன எதிர்பார்ப்புகள், மக்களிடம் இருந்து அரசுக்கு கோரிக்கைகளாக போன பின்பும், அதன் மேல் மாநில அரசு கவனம் செலுத்தவில்லை என்ற ஆதங்கம் மக்களிடம் உள்ளது. இது தி.மு.க., மீதான அதிருப்தியாக பரவிக்கிடக்கிறது.

தி.மு.க., மீதான இந்த அதிருப்தியைக் காட்டிலும் பா.ஜ., மீதான அதிருப்தி கூடுதலாக இருப்பதால், தொகுதி இயற்கையாகவே தி.மு.க., கூட்டணிக்கு சாதகமாக இருக்கிறது.

தொகுதி மக்கள் எதிர்பார்க்கும் வளர்ச்சிக்கான விஷயங்களில் பா.ஜ., கவனம் செலுத்தியிருந்தால், எதிர்பார்ப்பைக் காட்டிலும் அக்கட்சி தொகுதியில் வளர்ச்சி கண்டிருக்கும்.

திருவாரூர் மாவட்டத்தின் முன்னாள் அமைச்சர் காமராஜ், அந்தப் பகுதியில் தன்னை முன்னிலைப்படுத்தி வளர்ந்த அளவுக்கு நாகப்பட்டினம் தொகுதி முழுதும் தன்னை வளர்த்துக் கொள்ளவில்லை. இதனால், தொகுதியில் அ.தி.மு.க.,வுக்கு பலவீனம் காணப்படுகிறது.

மற்ற தொகுதிகளைப் போலவே இங்கும் நாம் தமிழர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு, 16 சதவீத வளர்ச்சியை எட்டியிருக்கிறது.


தொடர்ச்சியாக தொகுதியில் கம்யூ., வேட்பாளர்களே வெற்றி பெறுவது மக்களுக்கு சலிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இருந்தபோதும் கூட்டணி பலத்தில் மீண்டும் கம்யூ.,வே, 50 சதவீத ஓட்டுகள் பெற்று வெற்றி அடைய வாய்ப்புள்ளது.

**மல்லிகை வாசனை திரவிய தொழில்சாலை மற்றும் அரசு சர்க்கரை ஆலை அமைக்காதது; நெல்கொள்முதலில் வசூல் தொல்லை ஆகியவை தொகுதி மக்களுக்கான பிரச்னைகள்.**

**டிஜிட்டல் இந்தியா மற்றும் ஆதார் அமல்படுத்தியது, நான்கு வழி சாலை அமைத்தது போன்றவை மோடி அரசின் சாதனைகளாக பார்க்கப்படுகிறது.**

## சி.பி.ஐ., – எம்.பி., செல்வராஜ் செயல்பாடு




## 2024 – லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

| வேட்பாளர் | கட்சி |
|---|---|
| செல்வராஜ் | சி.பி.ஐ., |
| சுர்ஜித் சங்கர் | அ.தி.மு.க., |
| ரமேஷ் | பா.ஜ., |

## Vs

| கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி | | கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பாஜ., அரசு |
|---|---|---|
| 46.00% | மோசம் | 80.30% |
| 18.40% | சுமார் | 5.90% |
| 35.60% | சூப்பர் | 13.80% |

**தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள்**

- மகளிர் உரிமை தொகை
- இலவச மகளிர் பேருந்து

**பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்**

- மக்கள் மருந்தகம்
- சிறு தொழில் கடன்

## டாப் 3 அதிருப்திகள்


| தி.மு.க., | | | பா.ஜ., | |
|---|---|---|---|---|
| 22.50% | டாஸ்மாக், போதைப்பொருள் | 01 | 19.60% | மதச்சார்பின்மை சிதைவு |
| 19.00% | ஊழல் | 02 | 17.80% | மாநில அதிகார பறிப்பு |
| 14.80% | விலைவாசி உயர்வு | 03 | 16.60% | வரிச்சுமை |

கருத்து கணிப்பு காலம்: மார்ச் 28 – ஏப்., 7

கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை: 1,923

# சின்னத்தால் சிக்கல்!

### 2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 77.01 | 78.62 | - |
| தி.மு.க., + (%) | 27.39 | 49.80 | 38.80 |
| அ.தி.மு.க., + (%) | 45.70 | 38.40 | 27.80 |
| பா.ஜ., + (%) | 19.63 | | 24.10 |
| நாம் தமிழர் (%) | - | 2.19 | 7.80 |
| பிற + நோட்டா (%) | 1.07 | 1.06 | 4.2 |

விழுப்புரம் தொகுதியில் தலித் ஓட்டுகள் அளவுக்கு வன்னியர் ஓட்டுகளும் உள்ளன. தொகுதி ரிசர்வ் தொகுதி என்பதால், வேட்பாளர்கள் வன்னியர் ஓட்டுகளை கவரவே அதிக கவனம் செலுத்துகின்றனர்.

கடந்த தேர்தலில் வி.சி., சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ரவிக்குமாரே, இம்முறையும் போட்டியிடுகிறார். கடந்த முறை உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வென்றவர், இம்முறை பானை சின்னத்தில் போட்டியிடுவது அவருக்கு பெரும் சவாலை ஏற்படுத்தி இருக்கிறது. புதிய சின்னத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க படாதபாடுபடுகிறார் ரவிக்குமார்.

ஏற்கனவே, எம்.பி.,யாக இருந்து தொகுதிக்கு பெரிய அளவில் எதுவும் செய்யாததால், மக்கள் அதிருப்திக்கு ஆளாகி இருக்கும் அவரால், வெற்றிக்கு கூடுதலா உழைக்க வேண்டியிருக்கிறது. கடந்த தேர்தலின் போது ராகுலை பிரதமராக்க விருப்பப்பட்ட தொகுதி மக்கள், இம்முறை ராகுலையும் பிடிக்கவில்லை; மோடியையும் பிடிக்கவில்லை; புதியவர் யாராவது வரட்டும் என்று சொல்லி, புதுவிதமாக சிந்திப்பது, ரவிக்குமாருக்கு தலையை சுற்ற வைக்கிறது.

முடிந்தால் இந்த தொகுதியை கைப்பற்றலாம் என்ற நிலையில் கட்சி கட்டமைப்பை வைத்திருக்கும் அ.தி.மு.க., தொகுதிக்குள் முகம் அறியாத நபரான பாக்யராஜ் என்பவரை வேட்பாளராக்கி இருப்பது, சொந்த கட்சியினரையே சோர்வடைய வைத்திருக்கிறது.

இதனால், வன்னியர் சமூக ஓட்டுகளை தங்கள் பக்கம் முழுமையாக திருப்பலாம் என்ற முனைப்போடு களம் இறங்கி இருக்கும் பா.ம.க.,வுக்கு இந்த தொகுதி, வெற்றி வரை இட்டு செல்லாவிட்டாலும், இரண்டாம் இடத்துக்கு கியாரண்டி என்று சொல்லும் அளவுக்கு முன்னேறி இருக்கிறது.

கடந்த தேர்தலில் தி.மு.க., கூட்டணி சார்பில் போட்டியிட்டு, 50 சதவீத ஓட்டுகள் வரை பெற்று வெற்றியடைந்த நிலை, தற்போது முழுமையாக மாறி உள்ளது.


இருந்த போதும், கூட்டணி கட்சியான தி.மு.க.,வின் முழு பலத்தோடு இம்முறையும் வெற்றி பெறுவார் என்றே தெரிகிறது.

ஆனால், கடந்த முறை பெற்ற ஓட்டுகளை அவர் பெறுவதற்கு வாய்ப்பில்லை. 13 சதவீதம் வரை குறையும் என்பதே கணிப்பாக உள்ள நிலையில், வெற்றிக்காக ரவிக்குமார் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கிறது.

**இந்த தொகுதி மக்கள் தெரிவிக்கும் மிக முக்கியமான பிரச்னை குடிநீர் தட்டுப்பாடு தான்.**

**மோடி அரசின் மிகப்பெரிய சாதனையாக சந்திரயான், டிஜிட்டல் இந்தியா திட்டங்களை தொகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர்.**

### வி.சி., - எம்.பி., ரவிக்குமார் செயல்பாடு




### 2024 - லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

| வேட்பாளர் | கட்சி |
|---|---|
| ரவிக்குமார் | வி.சி., |
| பாக்யராஜ் | அ.தி.மு.க., |
| முரளி சங்கர் | பா.ம.க., |

### Vs

| | கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி | கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பாஜ., அரசு |
|---|---|---|
| மோசம் | 56.30% | 76.10% |
| சுமார் | 18.40% | 11.20% |
| சூப்பர் | 25.30% | 12.70% |

#### தி.மு.க., அரசால் பெற்ற நன்மைகள்

- மகளிர் உரிமை தொகை
- இலவச மகளிர் பேருந்து
- காலை உணவு திட்டம்

#### பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்

- போஸ்ட் ஆபீஸ் சேமிப்பு திட்டங்கள்
- சிறு தொழில் கடன்

### டாப் 3 அதிருப்திகள்


| தி.மு.க., | | | பா.ஜ., | |
|---|---|---|---|---|
| 19.70% | டாஸ்மாக், போதைப்பொருள் | 01 | 16.50% | வரிச்சுமை |
| 16.70% | ஊழல் | 02 | 14.00% | மதச்சார்பின்மை சிதைவு |
| 16.20% | விலைவாசி உயர்வு | 03 | 13.20% | கார்ப்பரேட் ஆதிக்கம் |

கருத்து கணிப்பு காலம்: மார்ச் 28 - ஏப்., 6

கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை: 1,958

# வளர்கிறது நாம் தமிழர் கட்சி

### 2024ல் எந்த கட்சிக்கு உங்கள் ஓட்டு?




| ஆண்டு | 2014 | 2019 | 2024 |
|---|---|---|---|
| ஓட்டு சதவீதம் | 71.28 | 69.46 | - |
| தி.மு.க., + (%) | 31.90 | 60.11 | 36.50 |
| அ.தி.மு.க., + (%) | 47.49 | 15.67 | 27.50 |
| பா.ஜ., + (%) | 9.59 | | 24.50 |
| நாம் தமிழர் (%) | - | 6.31 | 11.50 |
| பிற + நோட்டா (%) | 2.31 | 1.39 | - |

இங்கு, தற்போதைய எம்.பி., திருநாவுக்கரசர் வெளியூர்க்காரர். ஆனால், மக்கள் அது பற்றி கவலைப்படவில்லை. அவரால் எந்த பிரச்னையும் இல்லை; அதனால், தொகுதிக்கு ஒன்றும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை என்று தான் சொல்கின்றனர். அவர் மீது பெரிய அதிருப்தி இல்லாதபோதும், அவருக்கு இந்த இடம் தரப்படாததற்கு கூட்டணி நிர்பந்தம் தான் காரணம்.

'திருநாவுக்கரசரை ஏற்றுக்கொண்ட நாங்கள் வெளியூர்க்காரரான துரையையும் ஏற்றுக்கொள்வதில் பிரச்னை இல்லை' என்ற கருத்தும் பரவலாக இருக்கிறது. ஆனால், துரை மீது பெரிய அபிமானம் ஏதும் இல்லை. அ.தி.மு.க., வேட்பாளரை பொறுத்தவரை அவர், மணல் கொள்ளைக்கு பிரபலமாக பேசப்படும் கரிகாலனின் தம்பி என்பதால், மக்கள் விரும்பவில்லை. 'வெளியூர் வேட்பாளரால் லாபம் இல்லை என்றாலும் பிரச்னை இல்லை. ஆனால், இவர் உள்ளூரில் இருந்து கட்டப்பஞ்சாயத்து செய்வார், அதனால், வேண்டாம்' என்கின்றனர்.

அ.ம.மு.க.,வில் சாருபாலா தொண்டைமானை போட்டிருந்தால் சாதகமாக இருந்திருக்கும். செந்தில்நாதன் மீது அபிமானம் ஏதும் இல்லை. ஆக, வாக்காளர்களுக்கு மூன்று வேட்பாளர்களையும் பிடிக்கவில்லை. இருப்பினும் தி.மு.க., கூட்டணி வெற்றி பெறுவதற்கு ஒரே காரணம், அமைச்சர் நேரு மற்றும் கட்சியின் கட்டமைப்பு. அதெல்லாம் இருந்தும் தி.மு.க., கூட்டணியின் ஓட்டு விகிதம் கிட்டத்தட்ட, 24 சதவீதப்புள்ளிகள் குறைகிறது.

இந்த பெரிய வீழ்ச்சிக்கு காரணம் தி.மு.க., மீது உள்ள அதிருப்தி. அந்த அதிருப்தியை, நல்ல வேட்பாளர் வாயிலாக அ.தி.மு.க., கைப்பற்றி இருக்கலாம். வேட்பாளராலேயே, அ.தி.மு.க.,வின் ஓட்டு விகிதம் 10 சதவீதப்புள்ளிகள் வரை குறைகிறது.


பிரதமர் மோடி மீது பெரிய அதிருப்தி ஏதும் இல்லை என்றாலும், பா.ஜ., கூட்டணி வலுவான நிலையில் இல்லை. ஒரு காரணம் வேட்பாளர். மற்றொரு காரணம்,

பக்கத்தில் உள்ள தேனி தொகுதியில் தினகரனுக்கு பணியாற்ற பெரும்பாலான உள்ளூர் கட்சிக்காரர்கள் சென்றுவிட்டனர். அதனால், வாக்காளர்கள் தங்கள் அதிருப்தியை சரியாக வெளிப்படுத்த பெரிய கட்சிகள் இல்லாத சூழலில் நாம் தமிழர் கட்சி பக்கம் திரும்புகின்றனர். அந்த கட்சி, 10 சதவீதத்திற்கு மேல் வாங்க உள்ள தொகுதிகளில் இதுவும் ஒன்று.

**இந்த தொகுதி மக்கள், மின் வெட்டு தான் தங்கள் முக்கிய பிரச்னை என்கின்றனர். அதற்கு தி.மு.க.,வை தான் குறை கூறுகின்றனர்.**

**ராமர் கோவிலை மோடி அரசின் முக்கிய சாதனையாக வாக்காளர்கள் சொல்கின்றனர். அதே நேரம், 23 சதவீத வாக்காளர்கள் ராமர் கோவிலுக்காக மோடிக்கு ஓட்டுப்போடப் போவதாக சொல்கின்றனர்.**

### காங்., - எம்.பி., திருநாவுக்கரசர் செயல்பாடு





### 2024 - லோக்சபா தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்

- துரை — ம.தி.மு.க.,
- கருப்பையா — அ.தி.மு.க.,
- செந்தில்நாதன் — அ.ம.மு.க.,

Vs

| கடந்த மூன்று ஆண்டு கால ஸ்டாலினின் தி.மு.க., ஆட்சி | | கடந்த பத்து ஆண்டு கால மோடியின் பாஜ., அரசு |
|---|---|---|




**தி.மு,க., அரசால் பெற்ற நன்மைகள்**

- இலவச மகளிர் பேருந்து

**பா.ஜ., அரசால் பெற்ற நன்மைகள்**

- பெண்களுக்கு அதிகாரமளித்தல்

### டாப் 3 அதிருப்திகள்

| தி.மு.க., | | | பா.ஜ., | |
|---|---|---|---|---|
| 22.60% | டாஸ்மாக், போதைப்பொருள் | 01 | 20.80% | கார்ப்பரேட் ஆதிக்கம் |
| 18.50% | சட்டம் - ஒழுங்கு | 02 | 18.50% | மதச்சார்பின்மை சிதைவு |
| 14.80% | ஊழல் | 03 | 15.80% | மாநில அதிகார பறிப்பு |

கருத்து கணிப்பு காலம்: ஏப்ரல் 5 – 12

கருத்தை பகிர்ந்த நபர்களின் எண்ணிக்கை: 2,106